தமிழர் நேசன்

(தமிழர் கல்விச் சங்கத்துப் பத்திரிகை)

தொட்டனைத் தூறு மணற்கேணி மாந்தர்க்கு
கற்றனைத் தூறும் அறிவு—திருக்குறள்

தொகுதி IV. } ரௌத்திரி ஸு பங்குனி மீ } பகுதி 12.

மந்திரவாதிகளின் மாய வித்தைகள்.
The Miracles of Magicians.

---

2. வாயு ஸ்தம்பம்.
2. Levitation.

ஸ்ரீமான் P. N. அப்புஸ்வாமி ஐயர், B. A., B. L.
தொகுத்தெழுதியது.

மாஞ்செடியை வெகு சீக்கிரமாக முளைத்துக் காய்த்துப் பழுக்கச் செய்வதினும் விந்தையானது இவ்வித்தை. இந்த வித்தையை என் முன்செய்து காட்டியவித்தைகாட்டிப் பக்கிரியும் அவனுடைய ஆட்கள் பலருமாகச் சேர்ந்து பாடிக் கைகால்களை வீசி ஆடினார்கள். அவர்களது பாட்டமும் ஆட்டமும் சிறிது கூட மாறுதல்களின்றி ஒரே மாதிரியாகவே இருந்ததால் எங்களுக்கு அலுப்பே உண்டாயிற்று. இந்த அழுகை போன்ற பாட்டுக்கச்சேரி நெடுநேரம் நடைபெற்றது. பின்பு பக்கிரி மட்டிலும் தனியாக முன்வந்து வெகுவேகமாக

நடனம் செய்தான். அவன் உடுத்தியிருந்த உடை மிகவும் தளர்ந்திருந்தது. அவன் ஆடும்போது அவ்வாடை உயர்ந்து பரந்து விரிந்தது. அவனது கைகள் காற்றாடிபோல் சுழன்றன. ஆடிய ஆட்டம் மிகவும் விந்தையானதாகவே இருந்தது. இவன் இவ்வாறு ஆடிக்கொண்டிருக்கும்போது கூட இவனுடைய ஆள்களின் ஆட்டமும் பாட்டமும் சிறிதுகூடக் குறையவே இல்லை.

கடைசியில் அவன் மிகவும் நிதானமாக, அவசரமின்றி, தெளிவாக, கீழ்வருமாறு கூறினன். "நான் நிமிஷத்துக்கு நிமிஷம் கனக்குறைவு அடைகிறேன். இன்னும் சிறிது நேரத்தில் என் கனம் முழுவதும் தொலைந்துவிடும். அப்பொழுது நான் சுலபமாகப் பூமியினின்றும் உயரக் கிளம்பு வேன். காற்றில் பஞ்சுபோல உலவிவருவேன். மெல்லெனவே கீழே இறங்குவேன். பாருங்கள்".

பேசிக்கொண்டே திடீரென்று நாலைந்து அடி எட்டி வைத்து ஒரு குதி குதித்தான். சுமார் ஒருகஜம் உயரக்கிளம்பி இருப்பான். ஆனல் எட்டித் தாண்டிய தூரம் சுமார் பதினன்கு அடியிருக்கலாம். இதில் ஒருவிதமான சிரமமும் அவன் பட்டதாகத்தோன்றவில்லை. உயர எழுவதும் கீழே அமருவதும் அவசரமின்றியே இருந்தது. பின்பு முன்னிலும் அதிகமாகக் கைகளையும் கால்களையும் சுழற்றி வீசினன். திடீரென நேரே உயரக் குதித்தான். அவன் கால் மட்டம் எங்கள் தலைமட்டத்துக்கு மேலாகிவிட்டது. அவன் எளிதாகக் காற்றில் உலவிக் கொண்டே "இப்பொழுது எனக்குக் கனமென்பதே கிடையாது. என்னிஷ்டப்படி காற்றிலெங்கும் உலவிவருகிறேன். இதோ பாருங்கள் நான் இங்குமங்கும் போய்வருவதை" என்ருன்.

மெய்யாகவே இவன் உயர உலவிவருவதை நாங்கள் கண்ணாரக் கண்டு திகைத்தோம். அங்கு ஒரே வெளியாகத் தானிருந்தது: மெல்லிய கயிற்றையோ கம்பியையோ கட்டி விட்டு அதன் மீது நடக்கிருனென்று சொல்லுவதற்குப் பக்

கத்தில் மரமா, செடியா, வீடா ஒன்றும் கிடையாது. எனக்கு ஒன்று தோன்றிற்று. ஒருவேளை இது கண்கட்டி வித்தையாயிருக்கலாமென்று நான் நினைத்தேன். உடனே என் தோளிலின்று தொங்கிக் கொண்டிருக்கும் படம்பிடிக்கும் பெட்டியைத் திறந்து பக்கிரி இன்னொரு பக்கம் பார்த்துக் கொண்டிருக்கும்போது அவனைப்படம்பிடித்தேன். இம்மாதிரி மூன்று படங்கள் பிடித்தாய் விட்டது. நாலாவது தரம் படம் பிடித்துக் கொண்டிருக்கும்பொழுது பக்கிரி என்னைப் பார்த்து விட்டான். உடனே இன்னதுதான் நடந்தது என்று நான் உறுதியாகக் கூற முடியாது. பக்கிரியின் ஆள்களுக்கும் என் ஆட்களுக்கும் படம்பிடிக்கும் பெட்டியைக் கைவசப்படுத்துதற் பொருட்டுச் சண்டையுண்டாயிற்று. கடைசியில் எங்கள் கக்ஷியே ஜயமடைந்தது. ஆயினும் அன்றிரவே அந்தப்பெட்டி திருட்டுப்போய்விட்டது. ஆனால் நான் எடுத்திருந்த படங்களை அதற்கு முன்னமேயே அதிலிருந்து வெளியே எடுத்து பத்திரப் படுத்திவைத்துவிட்ட படியால் இதனால் அதிக நஷ்டம் ஒன்றும் ஏற்படவில்லை.

பின்னர் அப்படங்களைக் கழுவித் தயார் செய்து பார்க்கும்போது அவற்றில் எல்லாவற்றிலும் பக்கிரி பூமியின் மீதே நிற்பதாகக் காணப்பட்டான்! இதிலிருந்து உண்மையாகப் பக்கிரி பூமியின் மீது தான் நின்று கொண்டிருந்தானென்பதும், எங்கள் கண்களைக் கட்டிவிட்டதாலேயே அவன் அந்தரத்தில் நிற்பதாகத் தோன்றினானென்பதும் விளங்கிற்று. கண்ணாடியின் கண்ணை யாரால் கட்ட முடியும்? அதன் முன் என்ன நிகழ்கின்றதோ அதைச் சிறிதும் பக்ஷபாதமின்றி, சிறிதும் கலக்கமின்றி ஒரு வித மாறுபாடுமின்றி அப்படியே குறித்துக் கொள்ளுகிறது. அது மனிதனைப் போல உணர்ச்சி மாறுபாட்டங்கள் ஒன்றும் அடைவதில்லை யாதலால் அது நம்மைப் போல ஏமாந்து போவதில்லை.

ஆதலால் வாயுஸ்தம்பம் என்பது வெறும் கண்கட்டி வித்தை.

(தொடரும்).

தென் இந்தியாவிலுள்ள சில பாம்புவகைகள்.

Some South Indian Snakes.

விஜயநகரம் மகாராஜ கலாசாலையில் ஆசிரியராயிருக்கும்
ஸ்ரீமான் N. R. ரகுநாதாசாரியார், M. A. எழுதியது.

சாதாரணமாய் வருஷாவருஷம் இப்பாதகண்டத்தில், ஆயிரக்கணக்கான ஜனங்கள் பாம்புக் கடியினால் மாய்கின்றனர். இவர்களுள் மிகச் சிலர் தாம் உண்மையில் விஷப்பாம்புகளினால் கடிக்கப்படுகிறார்கள். பெரும்பான்மையோர் கேவலம் விஷமற்ற தண்ணீர்ப் பாம்பினால் கடிபட்டபோதிலும் பாம்பு கடித்துவிட்டது என்ற பயத்தினாலேயே மரணம் அடைகிறார்கள். * பாம்பு என்னும் சப்தத்தை கேட்டமாத்திரத்தில் நடு நடுங்கி மூர்ச்சையடையும் வீரர் அநேகர் நம்தேசத்தில் உளர்.† பிறர் கொஞ்சம் தீரமுடையோர் ஓணான், ஓந்தி, அரணை, முதலிய பாம்பைபோல் உள்ள ஊர்வன யாவற்றையும் கோரமான விஷப்பாம்பு என்று எண்ணி உலக்கைபோன்ற தடியினால் ஒரே புடையாய்ப் புடைக்கிறார்கள். இந்துக்களுக்கு ஜனமேஜய

* தமிழர் நேசன் I-ம் தொகுதியில் 359-ம் பக்கத்தில் பாலக்காடு விக்டோரியா கலாசாலையில் உயிர்நூலாசிரியராயிருக்கும் ஸ்ரீமான், M. ஏகாம்பரநாதன், M.A., L.T. 'விஷப்பாம்புகள்' என்னும் தலைப்பின் கீழ் எழுதிய வியாசத்தில் விஷப்பாம்புகளால் கடிபட்டவர்க்கும் விஷமற்ற பாம்புகளால் கடிபட்டவர்க்கும் உள்ள வேற்றுமைகளை எடுத்துச் சொல்லியிருப்பதைப் பார்க்கவும். ப-ர்.

† பாம்பென்றால் படையும் நடுங்கும் என்னும் பழமொழியைக் கவனிக்க. ப-ர்.

மஹாசக்கிரவர்த்தி காலமிருந்து இன்றையவரைக்கும் பாம்பின் மேல் பெரும்பகை ஏற்பட்டிருக்கிறது. கிறிஸ்தவரும் சாத்தானை (Satan) பாம்பின் உருவத்தை எடுத்துவந்து நமது மூதாதையரைத் தீவழியில் புகுத்தியதாகக் கூறுகின்றனர்.

இவ்வாறு இந்துக்களும் கிறிஸ்தவரும் ஒரே மாதிரியாய் பாம்பை வெறுப்பதுமன்றி அடித்தும் கொல்லுகிறார்கள். நாம் சொல்லுங்கால், நம் முன் பக்தியுள்ள சிலர் நம்மை ஆக்ஷேபித்து, நம்முன்னோர் காலம் முதல் இந்துக்கள் எக்காலத்திலும், பாம்பைத்தெய்வமாகக்கொண்டாடி நமஸ்கரித்து வருகிறார்கள் என்று சொல்லலாம். நம்முடைய நாகப் பிரதிஷ்டை முதலிய ஸர்ப்ப நமஸ்காரமெல்லாம் நமக்குப் பாம்பினிடத்திலிருக்கும் பயத்தினாலேயே ஒழிய மூதன்முதல் தெய்வபக்தியினால் ஏற்படவில்லை என்பது என்னுடைய கொள்கை.

ஏதேனும் ஒரு சிறிய பல்லி முதலிய ஜந்துவை வேலியின் ஓரத்தில் கண்டால் நம்முள் சிலர் ஒரு பெரிய நாகம் அதனுள் புகுந்தது என்று பிரமாணம் செய்யத் தொடங்குகின்றனர். மேலும் செத்தபாம்பைப் பலதடவை அடித்த பின்னும் கூட, பாம்பின்மேல் இருக்கும் க்ஷாத்திரமானது நமக்குத் திருப்தியைக்கொடுக்கிறதில்லை. இவ்வாறு நம்மவர் பாம்பின் சுபாவத்தை அறியாமலும் விஷப்பாம்புக்கும் விஷமில்லாததற்கும் உள்ள வித்தியாசத்தைத் தெரியாமலும், காலற்றுக் கையற்றுப் பேச்சற்ற அழகிய பாம்புவர்க்கத்தை எல்லாம் அநியாயமாய் அழிக்கிறார்கள். நமது தேசத்திலுள்ள அநேகம் விதமான (112வகைகள்) பாம்புவகைகளுள் மிகவும் சிலவே(15 வகைகளே) விஷமுள்ளவை. மற்றவை யாதொரு விதமான தீங்கையும் விளைவிக்கமுடியாததுடன் கூட, நமக்கு

நன்மையைச் செய்துவருகின்றன. ஆதலால் இச்சிறு வியாஸத்தில் தென் இந்தியாவில் மிகவும் சாதாரணமாய்க் காணக்கூடிய பாம்புகளைபற்றிச் சற்று எழுதத் தொடங்கினோம்.

பாம்பின் உருவமும் அவயவங்களும்.

பலவகைப் பாம்புகளைக் கவனிக்கு முன்னர், பாம்பின் உருவையும் அவயவங்களையும் பற்றிச்சற்று தெரிந்துகொள்வோம். பாம்பின் உடல் நீண்டு, உருண்டு, ஒருபுறம் பருத்து, மற்றொரு புறம் மெலிந்து கூர்மையாயிருக்கும். பருத்த தலைப்புறத்திற்கும் தேகத்திற்கும் நடுவில் கழுத்தென்பது இல்லை. தலையில் இருபக்கத்திலும் உள்ள பளபளவென்னும் கண்கள் மூன்று இமைகளாலே மூடப்பட்டிருக்கின்றன. கண்களுக்கு முன் மூக்கைப்போல் உள்ள நுனியில் இரண்டு சிறிய நாசித்துவாரங்கள் காணப்படுகின்றன. பாம்பு தன் வாயை வெகு அகலமாய்த் திறக்கக்கூடிய சக்தியை உடையது; ஏனெனில் கீழ் அலகானது இரண்டு பாகமாய்ப் பிளந்து நடுவில், ஒரு மெல்லிய சவ்வினால் சேர்க்கப்பட்டிருக்கிறது. வாயின் இரு அலகுகளிலும் பற்கள் உண்டு. அவைகள் நாயின் பற்களைப் போல், சிறியதாகவும் கொஞ்சம் உட்புறம் வளைந்ததாயுமிருக்கும். விஷப்பாம்புகளிலோவெனில் சில பற்கள் மற்றவைகளைக் காட்டிலும் பெரியனவாயும், உட்புறத்தில் குழாயையோ அல்லது வெளிப்புறத்தில் வாய்க்கால்போன்ற பள்ளத்தையோ உடைத்தாயிருக்கும். இந்தக்குழாயின்வழியே வாயின் பக்கங்களிலிருக்கும் விஷப்பைகளிலிருந்து (Poison glands) நஞ்சு ஓடி, விஷப்பல்லின் (Fang) முனையில் ஒரு சிறிய துவாரத்தால் வெளிவரும். பாம்பின் நாக்கு புல்லைப்போல் நீண்டு மெல்லியதாயும் முனையில் இருகூறாகப்பிளந்துமிருக்கும். பாம்புவாயை மூடிக்கொண்ட போதிலும் நாக்கானது இரண்டு

அலகுகளுக்கும் நடுவிலிருக்கும் சிறிய துவாரத்தின் வழியாய் அடிக்கடி வெளியே வரும். பாம்பு தன் நாக்கினால் உருசி பார்ப்பதுமன்றி தன் வழியையும் காற்றையும் உணர்ந்து செல் லும். "பாம்புச்செவியன்" என்று நாம் சிலரைச் சொல்லுவது வழக்கம், அவர்கள் காது வெகு கூர்மையாய்க் கேட்கும் என்பதே அதன் பொருள். ஆனால் வாஸ்தவத்தில் பாம்புக்கு நம்மைப்போலாவது பக்ஷிகளைப்போலாவது காது கிடையாது என்பதை அநேகர் தெரிந்திருக்கமாட்டார். பாம்பின் தேகம் முழுவதும் சிறிய நகம்போன்ற தட்டுக்களாற் (Scales) செய்யப்பட்ட சட்டையினால் மூடப்பட்டிருக்கிறது. அடிக்கடி இந்தச் சட்டையைப் பாம்பு கழற்றி எறிந்திருப்பதை நாம் கண்டிருக்கலாம். பாம்புக்குக் கைகளும் கால்களும் இல்லை. ஆனால் மலைப்பாம்புக்கு மட்டிலும் வாலின் அடியில் இரண்டு வளைந்த நகங்கள் உண்டு. இவைகள் நமது கால்களை ஒக்கும். தேகத்திற்கும் வாலுக்கும் மத்தியில் கீழ்ப்புறத்தில் சிறிய துவாரம் ஒன்றிருக்கிறது. இத்துவாரத்தின் வழியே மலம், மூத்திரம், முட்டை எல்லாம் வெளியாகும். தேகத்திற்கும், ஹ்ருதயம் (இரத்தாசயம்), சுவாஸப்பை (நுரையீரல்), ஈரல் எல்லாம் பாம்பின் நீண்ட உருவத்தை ஒத்து, நீண்டும், அகலம் குறைந்தும் அமைக்கப்பட்டிருக்கின்றன. பாம்புக்கு விலா எலும்புகள் அநேகம் உண்டு. இவைகள் முதுகின் மத்தியில் உள்ள முதுகு எலும்பிலிருந்து (Back-bone) புறப்பட்டு வயிற்றின் கீழ்ப்புறம்வரைக்கும்வந்து அங்கேயுள்ள தட்டுக்களோடு(Scales) பிணைக்கப்படுகின்றன. இவ்வெலும்புகளாலும் தன்தேகத்தின் சதையின் பலத்தினாலும் பாம்பு ஊருகிறது. சில பாம்புகள் மரம் ஏறுகின்றன. சில நீரில் நீந்துகின்றன. பாம்புகளில் ஆணுக்கும் பெண்ணுக்கும் சில பேதங்களுண்டு. பெண்பாம்பு முட்டையிடும். சிலபாம்புகள் முட்டைகளைச்

சுற்றிக்கொண்டு குஞ்சுபொரிக்குமளவும் அடைகாக்கும். பாம்பு நிலத்திலும், ஆறு குளங்களிலும், மரங்களிலும், கடலிலும் வசிக்கும்.

நல்ல பாம்பு.

தென் இந்தியாவில் காணப்படும் பாம்புகளில் மிகவும் சாதாரணமாகக் காணுவது நாகம் அல்லது நல்லபாம்பு. இப் பாம்பு அடிக்கடி நமது வீட்டிற்குள்ளும் இரை தேடுவதற்காக வருவது வழக்கம். நல்லபாம்பை அதன் படத்தினின்றும், படத்தில் உள்ள மூக்குக்கண்ணாடிபோன்ற அடையாளத்தா லும் வெகுசுலபமாய் அறிந்துகொள்ளலாம். இந்தியாவில் மூன்றுவகை நல்லபாம்புகள் இருக்கின்றன. பங்காளம், ஆஸ்ஸாம் மாகாணங்களில் வசிக்கும் ஒருவகை நாகத்திற்குப் படத்தில் கோழிமுட்டைபோன்ற ஒரு அடையாளந்தான் உண்டு. வடஇந்தியாவிலும், தென்இந்தியாவில் திருநெல்வேலி யிலும், மேற்குமலைத்தொடரிலும் மற்றொருவகை நாகம் படத்தில் ஒருவகை அடையாளமுமற்றதாய் காணப்படுகிறது. இதைக் கருநாகம்,கிருஷ்ணசர்ப்பம்,பறைநாகம் என்று பலவித மாய்ப் பெயரிடுகிறார்கள். மேற்கூறிய இம்மூன்றுவகை நாகங்க ளும்மிகவும்கொடிய விஷமுள்ளவை. இவைகளில் கிருஷ்ணசர்ப் பம்மிகவும்கொடியது. அதை ஆங்கிலேயர்நாகரசு(King Cobra) என்று சொல்லுகிறார்கள். இயற்கையில் நாகம் சாந்தமானது. மனிதனைக் கண்டால் ஓடிவிடும். பறைநாகமோ சுபாவத்தில் மனிதரைத் துரத்தும். கியாதிபெற்ற ஒரு டாக்டர் ஆஸ்ஸாம் தேசத்தில் செல்லும்பொழுது ஒரு பறைநாகம் தன் குட்டிக ளோடு விளையாடுவதைக் கவனித்தாராம். நாகமும் அவரைப் பார்த்து உடனே சீறிக்கொண்டு அவரைத் துரத்தத் தொடங் கியதாம். துரை விரைந்தோடியும் பாம்பு விடுவதாய்க் காண வில்லை. வழியில் ஒரு சிறிய ஆற்றைக் கடக்கவேண்டி நேர்ந்த

தாம். அவர் அதைக்கடந்து திரும்பிப் பார்க்கையில் பாம்பும் பின்தொடர்ந்ததாம். கடைசியில் களைத்து ஒன்றும் தோன்றாமல் தன் தலையிலிருந்த தொப்பியைப் பாம்பின்மேல் வீசி எறிந்தனராம். உடனே பாம்பு அதைப் பற்றிப் பலதடவை சீறிக்கடித்துச் சின்னாபின்னமாய்க் கிழித்ததாம். இதனிடையில் துரை தப்பி ஓடிவிட்டனராம். நமது தேசத்திலிருக்கும் நல்ல பாம்பு மிகவும் பயந்த ஜந்து. அதைப்பிடித்துப் பழக்கி பாம்பாட்டிகள் ஜீவிக்கிறார்கள். குழலை ஊதினால் ஆடுகிறது என்றும் சங்கீதத்தைக்கேட்டு ஆநந்திக்கிறது என்றும் நம்மவர் சொல்லுவார்கள். பாம்புக்குச் சப்தத்தைக் கேட்கக் காதுஇல்லையென்று முன்னமேயே கூறியிருக்கிறோம். அது ஆடும் ஆட்டமெல்லாம் பாம்பாட்டியின் கையிலிருக்கும் கோலின் பயத்தினாலேயே ஒழியப் பாட்டின் ஆனந்தத்தினால் இல்லை. நாகம் எப்பொழுதும் வளைந்து செல்லும். அதற்கு நேராகச் செல்லும் சுபாவமே கிடையாது. ஆகையால் நாகம் துரத்தினால் நாம் நேராகஓடிவிடுவதேமேல். நாகத்தைப்பற்றி அநேகம் கதைகள் நம்முன் வழங்குகின்றன. அதைச்சிலர் தெய்வமாகவும், சிலர் பிராமணர் என்றும் நினைத்து, அதைக் கொன்றுவிட்டால் அதற்குச் சில கிரியைகளும் செய்கிறார்கள். மலையாள தேசத்தில் நல்ல பாம்பை அடிப்பது வழக்கம் இல்லை. தென்னைமட்டையிலிருந்து நாரைக் கிழித்து அதன் நுனியில் சுருக்கிட்டு நாகத்தின் தலைப்புறமாய் அதை நுழைப்பார்கள். நாகம் அதற்குள் அகப்பட்டுக்கொண்டால் உடனே அதை ஒரு சட்டியில் அடைத்து ஜனங்கள் வசிக்காத காட்டுப் பிரதேசத்தில் கொண்டுபோய் விடுவார்கள்.

சாரைப்பாம்பு.

நாகத்தைப்பற்றிக் கூறுங்கால் மற்றொரு பாம்பின் ஞாபகம் சாதாரணமாக வருகிறது. அநேக இடங்களில் ஜனங்

கள் நல்லபாம்பைப் பெண் என்றும் சாரைப்பாம்பை அதன் புருஷன் என்றும் நினைக்கிறார்கள். இவ்வாறு நினைப்பதற்குக் காரணமும் இருக்கலாம். அதாவது, அடிக்கடி இவ்விருவகைப் பாம்புகளும் ஒன்றாகச் செல்வதை நாம் கண்டிருக்கலாம். சாரைப்பாம்புக்கு நாகத்தைக்காட்டிலும் சுறுசுறுப்பும் பலமும் அதிகம். இரைதேடுவதில் புத்தி கூர்மையும் அதிகம். நாகம் சற்று மந்தபுத்தியுள்ளது. ஆகையால் இரையின் நிமித்தம் அடிக்கடி சாரையை நாகம் தொடர்ந்து செல்லும். சாரைக்கு தேகத்தின் மேல்புறம் கறுத்துக் கீழ்ப்புறம் மஞ்சளாயிருக்கும். மேல்புறத்தில் தலைமுதல் வாலின் நுனிவரைக்கும் இரண்டு மஞ்சள் கோடுகள் உண்டு. சாரைக்குக் கண்கள் கொஞ்சம் பெரியவை. இப்பாம்பிற்கு எலியென்றால் மிகவும் பிரியம். எலி பிடிப்பதற்காக அடிக்கடி நமது வீட்டிற்குள் வரும். நம்மவர் இப்பாம்பைக் குறித்து அநேகம் தப்பெண்ணங்கள் கொண்டிருக்கிறார்கள். அவற்றுள் முக்கியமானவை என்னவென்றால், இப்பாம்பின் வால் தேகத்தின்மேல் பட்டால் பெருவியாதி வருமென்பதும் அது கடித்தால் மாலைக்கண் நேரிடுமென்பதுமே. எனக்குத் தெரிந்தமட்டும் இவ்வாறான வியாதிகளை உண்டுபண்ணும் சக்தி இப்பாம்பிற்கு இல்லையென்று உறுதியாய்ச் சொல்லலாம். இது விஷமற்றபாம்பு.

பச்சைப் பாம்பு.

விஷமற்ற வருக்கத்தைச்சார்ந்த அநேகம் வகைப் பாம்புகளில் பச்சை அல்லது ஓலைப்பாம்பு ஒன்று. இப்பாம்பைக் கொடிபோலுள்ள மிகவும் நீண்ட பச்சைத் தேகத்தினாலும், முகத்தின் முன்பக்கத்தில் மூக்கைப்போல் ஒரு சிறிய அங்கத்தினாலும் தெரிந்துகொள்ளலாம். இது தன் வாழ்நாளை மரத்தின் கிளைகளிலாவது கொடிகளிலாவது கழிக்கிறது. மனிதன் கண்ணைக் குத்துவதில் இதற்கு வெகு பிரியம்

என்று ஜனங்கள் சொல்வதை நாம் கேட்டிருக்கிறோம். அம்மாதிரியான பக்ஷபாதம் ஒன்றும் இப்பாம்பிற்கு இல்லை. இது நம் தலையின் மேலே இருப்பதால் நாம் அதை அடிக்கவந்தோமென்று பயந்து தன் சமீபத்திலிருக்கும் முகத்தைத் தாக்குகிறதே ஒழிய கண்ணைமாத்திரம் குறிவைத்துக் குத்துவதில்லை.

கொம்பேறி மூக்கன்.

இப்பாம்பைப்போல் நீண்ட பச்சை உருவமும் சற்று பருத்த தலையையும் உடையது கொம்பேறி மூக்கன் என்று வழங்கும் பனையேறிப்பாம்பு. இதைப்பற்றிச் சிறிய விசித்திரக்கதை ஒன்று உண்டு. இது ஒருவனைக் கடித்தவுடன் மரத்தின்மேல் ஏறிக்கொள்ளுவதாகவும், அவனை நன்காட்டில் கொளுத்திய புகையைக்கண்டபின் தான் மரத்தைவிட்டு இறங்குவதாகவும்; ஆதலால் இப்பாம்பினால் கடிபட்டவுடன், வைக்கோல் முதலியவைகளைக் கொளுத்திப் புகையை உண்டாக்கினால் அதைக் கண்டு ஆள் இறந்தானென்று நினைத்துப் பாம்பு மரத்தினின்று கீழே இறங்கிவிடுமென்றும், கடிபட்டவருக்கும் உடனே விஷம் இறங்கிவிடும் என்றும் சிலர் நம்பிவருகிறார்கள். இது அனைத்தும் கட்டுக்கதை என்பதற்குக் கொஞ்சமேனும் ஐயமில்லை. இப்பாம்பு சாதாரண, அதிக விஷமற்ற ஜாதியைச் சேர்ந்தது. இதன் விஷம் மனிதனுக்கு யாதொரு தீங்கும் விளைவிக்கக் கூடியதன்று.

தண்ணீர்ப் பாம்பு.

நம் தேசத்தில் காணப்படும் பாம்புகளில் அநேகம் மிகவும் விஷமற்றவை. தண்ணீர்ப்பாம்பு அடிக்கடி நமது குளங்களிலும், ஆறுகளிலும் காணப்படும். இது மிகவும் சாது என்று நமது சிறுவர்களுக்குக்கூட தெரிந்தவிஷயம். இதைப்பற்றிய விசேஷம் ஒன்று உண்டு. அடிக்கடி இப்பாம்பு மீல

த்தில் உலவுவது வழக்கம். ஒரு குளத்திலிருந்து மற்றொரு குளத்திற்குப் போவதற்காவது, அல்லது வேறு காரணம் பற்றியாவது நீரைவிட்டு வெளியேவரும். பருந்து, கருடன் முதலியவை இப்பாம்பைத் தண்ணீரிலிருந்து காலினால் பற்றி விடும். ஆனால் நிலத்தில் போகும்பொழுது மெல்லிய நடையினாலும், தேகம் முழுவதும் கறுப்பு மஞ்சள் நிறமுள்ள வளையம்போன்ற கோடுகளினாலும், இப்பாம்பு கொடிய விஷமுள்ள கட்டுவிரியனை ஒத்திருக்கிறது. ஆகையால் நிலத்தில் வரும்பொழுது பருந்து இதைப்பார்த்துப் பயந்து பக்கத்தில் நெருங்குவதில்லை. தண்ணீர்ப் பாம்புகளில் இருவகை உண்டு. இருவகைகளும் விஷமற்றவை.

மலைப்பாம்பு.

பாம்புகளில் மிகவும் பெரியது மலைப்பாம்பு. இது வெகு சாந்தமானது, விஷமுமற்றது. வாலினால் குளத்தின் அருகிலுள்ள மரங்களின் கிளைகளைச் சுற்றிக்கொண்டு தேகத்தை ஆலம் விழுதுபோல் தொங்கவிடும் என்று சொல்லுகிறார்கள். இரவில் தண்ணீர் பருகுவதற்கு ஆடு முயல் முதலியவை குளக்கரையை நாடுமேயாகில் அவற்றின் வயிற்றில் இப்பாம்பு ஒரே சுருட்டாய் சுற்றிக்கொண்டு தன் வலுவினால் இறுக்கி நசுக்கிக் கொன்றுவிடும். சாதாரணமாய் மாதத்திற்கு ஒரு முறை அல்லது இரண்டு மாதங்களுக்கு ஒரு முறைதான் ஆகாரம் உண்ணும். சென்ற ஜனவரி மாதத்தில் மாடேர்ன் ரெவ்யூ (Modern Review) பத்திரிகையில் இவ்வகைப்பாம்பு ஒன்று ஒரு பெரிய பன்றியை விழுங்கும் சமயத்தில் படம் (Photograph) எடுத்த ஒரு சித்திரம் காட்டப்பட்டிருக்கிறது. 8 முதல் 12 அடி வரையில் நீளமுள்ள பாம்புகள் இவ்வகையில் சாதாரணமாய் காணலாம்.

இப்பாம்பை நீண்ட உருவத்தாலும் பருத்த முக்கோணத்தலையினாலும், கண்ணாடி போலுள்ள பளபளப்பான தேகத்தாலும் தெரிந்து கொள்ளலாம்.

விரியன்.

இன்னும் மற்ற விஷமற்ற பாம்புகள் ஒவ்வொன்றையும் பற்றி எழுதுவதற்கு இச்சிறுவியாசத்தில் இடமில்லாமையால், விஷமுள்ள பாம்புகளில் சிலவற்றை இங்கு கூறுவோம். நல்லபாம்பைப்பற்றிச் சற்று முன்னர் சொன்னோம். விஷ சாதியைச் சேர்ந்த ஒரு வகைப்பாம்புக்கு விரியன் (Viper) என்று பெயர். மற்ற பாம்புகளைப்போல் இவைகள் முட்டை வெளியே இடாமல் குட்டிகளைப் பெறுகின்றன. (Russel's Viper) கண்ணாடி விரியனை மலைப்பிரதேசங்களிலும் மணல் வெளிகளிலும் சிலர் கண்டிருக்கலாம். இது மிகக் கொடிய பாம்பு. கடித்தால் பிழைப்பது வெகு அரிது. ஆனால் பார்ப்பதற்குப் பாம்புகளில் மட்டுமன்று, மற்ற ஜந்துக்களிலும் கூட இப்பாம்பிற்கு சமானமான அழகுள்ள பிராணி வேறு எங்கும் காணப்படமாட்டாது. இப்பாம்பு வெயிலில் செல்லும் பொழுது ஜ்வலிக்கின்ற மாணிக்கமாலைபோல் தோன்றும். இதைப் பருத்த தலையினாலும் முதுகின் முழுமையும் தலையிலிருந்து வால் வரைக்கும் மூக்குக் கண்ணாடி போலுள்ள அடையாளங்களாலும் தெரிந்து கொள்ளலாம். 4 அல்லது 5 அடிக்குமேல் உருவம் நீண்டு இருப்பதில்லை. விரியன் ஜாதிப் பாம்புகள் சுபாவமாய் வெகு சாந்தமானவை. அதாவது வேணுமென்று தானாக மனிதரைப் போய்த் தீண்டுவதில்லை. மேலும் அவைகளுக்கு மனிதனைக் கண்டால் பயம் அதிகம். அதிலும் கண்ணாடி விரியன் மிகவும் பயந்தது. நாம் அதை வெருட்டி வதைக்க ஆரம்பித்தால் தன் உயிரைத்

காப்பாற்றிக் கொள்ளுமாறுகடிக்க முயலும். இவ்வகையைச் சேர்ந்தது கட்டுவிரியன் என்னும் மற்றொரு பாம்பு. இது மிகவும் குட்டை. 2 முதல் $3\frac{1}{2}$ அடி நீளமுள்ளது. இதை அறிவதற்கு நாம் சற்று அதைக் கவனிக்கவேண்டும். தலை முதல் வால்வரை இதன்முதுகின் நடுவில் அறுகோணமான அடையாளங்களிருக்கின்றன. கீழ்ப்புறம் ஒரே வரிசை தட்டு களினாலும் (Scale) சிறியவாலினாலும் இதைக் கண்டு கொள்ளலாம். மலைகளிலும் தண்ணீரின் சமீபத்திலும் இது வசிக்கும். இது கடித்தால் மருந்துகிடையாது.

சுழிவ்ரியன்.

எக்கிஸ் (Echis) என்று வழங்கும், மற்றொரு விஷப் பாம்பு நமது தேசத்தில் அடிக்கடி பாறைகளின் கீழ் காணப் படும். ஒருசமயம் நான் சில சகபாடிகளோடு சென்னைக்கடுத்த பல்லாவரம் சென்றேன். அவ்விடத்தில் மரம் செடி முதலிய அநேக ஜீவராசிகளைப் பரீக்ஷை செய்யுங்கால் சிலர் ஒரு பெரிய பாறையை மலையிலிருந்து கீழே உருட்டினார்கள். அப்பா றைக்கு அடியில் ஒரு சிறிய குழியில் இப்பாம்பு ஒன்று சுருட்டிக்கொண்டிருந்தது. சுபாவமாய் இது மற்ற விரியன் களைப்போலல்லாமல் மூர்க்க குணமுடையது. ஆகவே பாறை நீக்கப்பட்டவுடன் சீறிக்கொண்டு எதிர்க்க தொடங்கியது. இவ்வகை நண்பர்களை அம்மாதிரியான இடங்களில் காண்பது வெகு சகஜமானதால் அவர்களைத் தகுந்த மரியாதை செய்யச் சாராயம் (Alcohol) தடி முதலிய வற்றை எடுத்துச் செல்லு வது வழக்கம். உடனே ஒரு குடையின் பிடியினால் அம் மூர்க்கரை தரையின் மேலழுத்தி ஒரு இடுக்கியினால் பிடித்து சாராயம் நிரம்பிய புட்டியில் அடைத்தார்கள். உயிரை இழப் பதற்குக் கொஞ்சமேனும் இஷ்டமில்லாதவர்களுள் இப்பாம்பு

ஒன்று. ஆனது பற்றிச் சிறையிலடைபட்டுச் சுமார் 1½-மணி நேரம் வரைக்கும் பலவிதமாகப் பாடுபட்டுக் கடைசியில் தன் தலைவிதியை வெல்ல யாராலும் முடியாது என்றும் தத்துவத்தை நன்கு உணர்ந்து தலையை கீழே சாய்த்தது. இது மிகவும் கொடிய விஷமுடையது. இதற்கு தலையில் கிளாவர் போன்ற அடையாளம் உண்டு. 2 அடி முதல் 3 அடி நீளம் வரை இருக்கும்.

விஷப்பாம்புகளுக்கு எல்லாம் சமுத்திரத்தில் வசிக்கும் கடல்பாம்பையே ராஜா என்று சொல்லலாம். ஏனெனில் அதின் விஷம் நாகத்தின் விஷத்தைக்காட்டிலும் பதின் மடங்கு கொடியது. இப்பாம்பு 1½ முதல் 3 அடி நீளமுள்ளது. வால்புறம் பட்டையாயிருக்கும். தலை சிறுத்துத் தேகம் பருத்திருக்கும். அடித்துக்கொல்லும் போதிலும் இது கடிக்க எத்தனிப்பதில்லை. இவ்விஷயத்தை ஆலோசிக்குங்கால் நமக்கு ஈசுவரனுடைய சிருஷ்டியைக் குறித்து ஆச்சரியம் மேலிடுகிறது. சிலபாம்புகளுக்குக் கொடிய விஷத்தைக் கொடுத்து, ஆனால் அவைகளை சாந்தமாகவும் பயங்காளிகளாகவும் செய்தது கடவுள் சிருஷ்டியின் மகிமையே.

பெரும்பான்மையோர் பாம்பின் கடியினாலன்று பயத்தினால் உயிரை இழக்கிறார்கள் என்று நாம் முன் கூறினோம். வைத்திய சாஸ்திரம் நன்றாய் அறிந்த பேர் பெற்ற டாக்டர்கள் இவ்விஷயத்தை உண்மையென்றே கூறுகிறார்கள். கொடிய விஷப்பாம்பினால் கடிபட்ட போதிலும் பிழைப்பதற்கு மார்க்கம் உண்டு. விஷமற்ற தண்ணீர்ப் பாம்பு முதலியவற்றால் கடிபட்டு உடனே கட்டு விரியனோ, கண்ணாடி விரியனோ, நாகசர்ப்பமோ கடித்துவிட்டது என்று பயத்தால் அப்பயமே மரணத்துக்கு காரணம் ஆகும். விஷப்பாம்புகளின் கடிக்கு

மருந்துகள் சில உள. ஒவ்வொருவகைப் பாம்பிற்கும் ஒவ்வொருவித மருந்து உண்டு. நமது தேசத்தில் மந்திரத்தால் விஷம் நீங்கிவிடும் என்ற நம்பிக்கை இருக்கிறது. பாம்பினால் கடிபட்டால் பின் சொல்லியவாறு செய்தால் பல இடங்களில் உயிர் பிழைத்திருக்கிறது. அதாவது, ஹிருதயத்திற்கும் கடித்த இடத்திற்கும் மத்தியில் காயத்திற்கு சமீபமாய் ஒரு கயிற்றை இறுகக் கட்டி நஞ்சுற்ற உதிரம் ஓடி இரத்தத்தில் பரவாமல் செய்யவேண்டும். கடித்த இடத்தை நல்ல குளிர்ந்த நீரினால் கழுவி பழுக்கக் காய்ச்சிய இரும்புக் கோலினால் சுடவேண்டும். அல்லது உழுமண், (Bleaching Powder) பொட்டாசியம் பெர் மாங்கனேட் (Potassium permanganate) முதலியவற்றை வைத்து நன்றாய்த் தேய்க்கவேண்டும். பிறகு அருகாமையிலுள்ள வைத்தியனது சகாயத்தையும் தேடவேண்டும். எல்லாவற்றிற்கும் மேலாக மனோதைரியம் முக்கியமாய் வேண்டும். சுறு சுறுப்பும் வேண்டும். உடனே சிகிச்சை முறைகளைக் கையாளவேண்டும்.

இவ்வியாஸத்தைப் படிப்போர் விஷமுள்ள பாம்புகளை விஷமில்லாத பாம்புகளின்றும் எளிதில் தெரிந்துகொண்டு, அநியாயமாய் எல்லாவகைப் பாம்புகளையும் அழிக்காமல், கொடியவைகளை மட்டிலும் கொன்று சாதுக்களைக் காத்துவருவார்கள் என்று நம்புகிறோம்.

யோசேப் கரிபால்டி.

Joseph Garibaldi.

(தொடர்ச்சி)

ஸ்ரீமான் T. R. ராஜகோபால ஐயர் எழுதியது.

பதினெட்டாவது நூற்றாண்டில், இத்தாலிய தேசத்தில், எங்குபார்த்தாலும் குழப்பங்களும், கலகங்களும், துரைத்தனம், பிரஜை இவ்விருவர்க்குள் வேற்றுமையும், விரோதமும், கொடிய தண்டனைகளும், சிறையும், சிரச்சேதமும், தேசநீக்கமும் பெருகின்றன. ஆதிகாலத்தில், தலைமை பூண்டு விளங்கிய இத்தாலியர்கள் காலக்கொடுமையினால் தம் சுய அரசாட்சியை யிழந்து, பற்பல வெளியரசர்கள் கைக்குள்ளகப்பட்டுக் கடைசியில், கணக்கற்ற கொடூரங்கள் திரண்டு உருவெடுத்தாற்போன்ற கிராதகர்களான ஆஸ்திரியர்களால் ஆளப்பட்டுவந்தனர். இப்பரதேசிகளின் அட்டகாசங்களைச் சகிக்க முடியாது நெட்டுயிர்த்து இத்தாலியர்கள் வருந்துகையில், சில புத்திமான்கள் எழும்பி அவர்களைத் தைரியப்படுத்தி, சுதேசத்தின் ஐக்கியத்திற்கும் வளர்ச்சிக்குமான மார்க்கங்களை ஆராய்ந்தறிந்து வெளிப்படுத்தி வந்தார்கள். இவ்விதம் செய்துவந்தவர்களில்முக்கியமானவர் எவரெனில் கார்போனரி சங்கத்தினரும் சுதந்தரத்தின் அருமைப் புதல்வனுன யோசேப் மாஸினியுமே.

இத்தேசத்தில், 1807-ம் வருடம் ஜுலைமாதம் 4-ந் தேதியில், ஜினோவாவுக்குச் (Genoa) சமீபத்திலுள்ள நைஸ் (Nice)என்ற இடத்தில், டோமினிக் கரிபால்டி(Dominique

Garibaldi) என்றவனுக்கும் ரோஸா ரோக்வின்டா (Rosa Roquinda) என்றவளுக்கும் பிறந்தவர் நமது யோசேப் கரிபால்டி (Joseph Garibaldi).

இவருடைய குடும்பத்தினர் சிறந்த மாலுமிகளாக விளங்கியவர்கள். இக்குணாதிசயமே இவரையும் அடைந்து பேரலைகளும், கடும் புயலும், கொடிய ஜீவப்பிராணிகளும் நிறைந்த கடலை எப்பயமும் இல்லாது, தரையின்மீது ஓடியாடித் திரிவதுபோல், கடக்கச் செய்தது. கல்வித்தேர்ச்சியில்லாத இவருடைய பெற்றோர்கள் கல்வியின் மகத்துவத்தை நன்குணர்ந்து, தம் மைந்தனுவது ஓர் கலைஞனாகவேண்டுமென நினைத்து, அதற்கான ஏற்பாடுகளைச் செய்து வந்தபோதிலும், இவர் கற்கமனமில்லாது, கடற் பிரயாணத்தில் தன் மனத்தைச் செலுத்தி, பின் ஓர் நிகரற்ற மீகாமனாகத் திகழ்ந்து விளங்கவேண்டுமென அவாவினார். மனக்கிளர்ச்சியும், ஊக்கமும், உழைப்பும், நுண்ணறிவும், ஆண்மையும் நிறைந்திருந்தமையால், இவர் தன் பாலப்பருவமுதற்கொண்டே ஏனைய சிறுவர்களை அடக்கி ஆண்டுவந்தார்.

பன்னிரண்டாவது பிராயத்தில், ராபின்ஸன் க்ரூஸோவைப்போல், இவர் தன் நண்பர்களுடன் வேறு நாடுகளுக்குச் சென்று வியாபாரஞ்செய்து செல்வர்களாகவேண்டுமென எண்ணி, ஓர் படகைத் தயாரித்துப் புறப்பட்டனர். இதை ஓர் கிறிஸ்தவப் பாதிரி அறிந்து தடுத்தமையால், இவருடைய விருப்பம் பலிக்காமற்போயிற்று. எனினும், இவருடைய ஆசை தணியவில்லை. இவருடைய மனப்போக்கை இவருடைய பெற்றோர்கள் அறிந்து ஆக்ஷேபிக்காது, இவரை ஓர் பெரிய கடற்பிரயாணியாக விளங்கச் செய்யவேண்டுமென இவருடைய பிதா நிருணயித்து, அதற்கான முறைமைகளை இவர்க்குத் தெரிவித்து வந்தான்,

இவர் தன் தகப்பனுருடன் கடற்பிரயாணஞ் செய்துவருகையில், ஒழிவுநேரங்களில், தன் சரிதத்தைச் சரியாகப் படித்தறிந்தார். சுதேசாபிமானம், இணக்கம் முதலானவைகளைத் தன் தேசத்தினர்க்கு ஊட்டுவித்து, நிலைகெட்டு விழாநிற்கும் இத்தாலியாவை மீண்டும் ஆதிகாலத்திய சிறப்புடன் விளங்கச் செய்யவேண்டுமென எண்ணினுர்.

இச்சமயத்தில், ஸ்பெயின், ப்ரான்ஸ், ஆஸ்திரியா, பெல்ஜியம் முதலான தேசங்களின் அரசர்களுக்குள் வித்தியாசங்கள் ஏற்பட்டுக் கலகங்கள் உண்டாயின. இத்தாலியாவை ஆஸ்திரியரின் ஆட்சியினின்று விடுவிப்பதற்கான தருணம் இதுதான் என நினைத்து நமது கரிபால்டியும் மிக்க ஊக்கத்துடன் உழைக்க வாரம்பித்தார்.

இத்தாலியாவிலுள்ள பீட்மான்டில், (Piedmont) 1821-ம் வருடத்தில், சார்லெஸ் பெலிக்ஸ் என்ற அரசனுக்குப்பதிலாக சார்லெஸ் ஆல்பர்ட் என்றவன் ராஜ்ஜியபரிபாலனஞ் செய்துவருகையில், இவன் நற்குண நடத்தைகளையுடையனுதலால், ஜனங்களின் பொது நன்மையை அநுசரித்து நடப்பதான ராஜாங்கத்தை ஸார்டினியா என்ற தேசத்திற்கு அளித்தனன். பின், சார்லெஸ் பெலிக்ஸ் ராஜ்ஜியாதிகாரம் வகித்தவுடன், மேற்சொல்லிய சீர்திருத்தத்தை ரத்துசெய்து, "கடவுளாலும், கடவுளின் பிரதிநிதியான நிலனுள்பவனுலும் ஏற்படுத்தப்பட்ட விதிகளுக்குக் கீழ்ப்படிந்து நடத்தலே குடிகளின் கடமையாதலால், அவர்கள் அங்ஙனமே செய்யவேண்டும். எம்முடைய போக்கைத் தடுத்து வாதிப்பவர்கள் எம்முடைய விரோதிகள். அவர்களுக்குத் தக்க சிக்ஷை விதிக்கப்படும். ஆதலால், எம்முடைய நோக்கங்களை எதிர்க்காது அவைகளுக்குக் கீழ்ப்படிந்து நடப்பவர்களே எம்முடைய யாகாணங்க

ளில் வசிக்கத்தக்கவர்கள்,'' என விளம்பரஞ் செய்தனன். இது போலவே இத்தாலியாவின் பற்பல சிற்றரசர்களும் செய்து வந்தார்கள்.

1831-ம் ஆண்டில், சார்லெஸ் பெலிக்ஸ் மரித்தனன். பின், முதலாவது சார்லெஸ் ஆல்பெர்ட் என்றவன் சிங்காதன மேறினன்.

இஃதிவ்வாறாக, கொடுங்கோலரசர்களின் கொட்டத்தை அடக்கி, பொதுஜனவரசாட்சியை இத்தாலியாவில் நிலைநிறுத்தப் பற்பல சங்கங்கள் மேற்கிளம்பி உழைத்தன. இத்தாலியாவிலுள்ள ரோம், நேபில்ஸ், டஸ்கனி, லம்பார்டி, வெனிஷியா, பீட்மாண்ட், இவைபோன்ற இன்னுமேனைய சிற்றரசுகளைச் சேர்த்து, இத்தாலியாவை ஓர் சுயவரசாக்ஷிபெற்ற தேசமாக விளங்கச் செய்யவேண்டுமெனப் பத்திரிகை, கடிதம், இலக்கியங்கள் மூலமாகப் பிரசுரித்துவந்த மாஜினி சுதேசத்தினின்று வெளிப்படுத்தப் பட்டபின், வெளிநாட்டினருடன் கூடித் தன் உள்ளக் கருத்தைப் பகிரங்கப்படுத்தி, அவர்களையும் தன் பக்கத்தில் சேர்த்து "இள இத்தாலியா" என்ற பெயருடன் ஒரு சங்கமும் பத்திரிகையும் ஏற்படுத்தி உழைத்து வந்தார். இவருடைய கொள்கைகளை அநுஷ்டானத்திற்குக் கொண்டுவர முன்வந்தார் கரிபால்டி. 1833-ம் வருடத்தில், மார்ஸேல்ஸ் என்ற நகரில், நமது கரிபால்டியும் மாஜினியும் சந்தித்தனர். இதைப்பற்றிக் கரிபால்டி பின்வருமாறு சொல்லியிருக்கின்றார்: "கொலம்பஸ் மகானுக்கு அமெரிக்காவைக் கண்டுபிடித்தவுடன் உண்டான சந்தோஷத்தைவிடப் பதின்மடங்கு அதிக மனவெழுச்சியும் களிப்பும், நான் மாஜினியைக் கண்டவுடன், எனக்குள் உண்டாகிப் பெருகின."

ஒரு பெரும் சைன்னியத்தைத் திரட்டி ஆஸ்திரியர்களை எதிர்த்து, அவர்களைக் கூடிய சீக்கிரத்தில் இத்தாலியாவினின்று வெளிப்படுத்திவிட வேண்டுமெனவும், இவ்விதம் செய்தற்குப் புஜபலமும், வீரமும், மனோதிடமும் பொருந்திய தலைவன் ஒருவனை நியமிக்கவேண்டுமெனவும், இக்குணாதிசயங்கள் பொருந்தியவன் முன்கூறிய சார்லெஸ் ஆல்பர்ட் ஒருவனே எனவும் நிச்சயித்து மாஜினியும் கரிபால்டியும் அவ்வரசனுக்கு ஓர் கடிதம் வரைந்தனுப்பினர். அவன் ஸ்திரபுத்தியனல்லவாதலாலும், பெரும் படைகளையுடைய ஆஸ்திரியர்களை எதிர்த்து வெல்லமுடியாதெனக் கொண்டவனாதலாலும், அக்கடிதத்திற் கண்ட நற்போதனைகளைப் பின்பற்றிச் செய்யத் துணிபவில்லை. மேலும், அவ்வரசனையும் அவனுடைய ராஜாங்கத்தையும் மாஜினியும் கரிபால்டியும் இவர்களுடைய வகுப்பினரும் எதிர்த்துக் கொலைசெய்து சின்னாபின்னமாக்கச் சதியாலோசனை செய்துவருவதாக அவ்வரசனுடைய கீழ் உத்தியோகத்தினர் அவனிடம் கூறவே, அப்பேதையும் அப்பொய்க் குற்றங்களை நம்பி மேற்கூறிய வகுப்பினரில் பெரும்பான்மையரையும் எத்தகைய விசாரணையுமில்லாது சுதேசத்தினின்று அகற்றியும், சிறைப்படுத்தியும், சிரச்சேதஞ் செய்தும் இமிசித்தான். மேலும், நமது சூரர் இருவரும் தம் ராஜ்ஜியத்திற்குள் எப்பொழுதாவது தோன்றுவாராயின், அவர்களை உடனே பிடித்துச் சுட்டுவிடவேண்டுமெனவும் ஆக்ஞாபித்தான்.

பின், மாஜினி ஸ்விட்ஸர்லாண்டிலும் ப்ரான்சிலும் லண்டன்மாநகரிலுமாக இருந்துவந்தார். நமது கரிபால்டியோ அவ்விடங்களிலிருக்க மனமில்லாது கப்பலேறித் தென் அமெரிக்காவிலுள்ள ரியோ ஜனீரோ (Rio Janeiro) என்ற இடத்தையடைந்தார்.

அவ்விடத்தில் இவர் தன் சுதேசத்தினருடன் சேர்ந்து இத்தாலியாவின் நன்மைக்காக உழைத்ததையும்; இத்தருணத்தில், ப்ரஸில் (Brazil) என்ற மாகாணத்தினுல் குரூரமாக நடத்தப்பட்ட ரியோ க்ராண்ட் (Rio Grande) என்ற சிற்றரசு முன்சொல்லிய கொடுங்கோலரசினின்று பிரிந்துவிடத் தயாரித்து, இறுதியில், தான் சுயவரசாட்சி நாடாய் விட்டதாக அச்சிற்றரசு விளம்பரஞ் செய்ததையும்; இக்காரணத்தையிட்டு அவ்விரு ராஜாங்கங்களுக்கும் போர் உண்டானபொழுது, புதிதாகச் சுதந்தரம் பெற்ற நாட்டுடன் நமது கரிபால்டி சேர்ந்து, கடலிலும் பூமியிலும் பற்பல சண்டைகள் புரிந்ததையும்; ஒரு சமயத்தில் வென்று, மற்ற சமயத்தில் தோற்றுக் கைதியாக்கப்பட்டு வருந்தியதையும்; கடைசியில், மேற்கூறிய சிற்றரசு இவருடைய சாமர்த்தியத்தினுலும் ஊக்கம், உழைப்புகளினுலும் ஜயித்துச் சுதந்தரம் பெற்றதையும்; இவருடைய வீரச் செயற்களை அவ்வரசு புகழ்ந்து, இவர்க்கும் 'இவருடைய நண்பர்களுக்கும் தக்க பரிசளிக்கவேண்டுமென நினைத்து வெளியிட்டபொழுது, கஷ்டநிலைமையிலகப்பட்டுத் துக்கித்துக்கொண்டிருந்த எங்களுக்கு நீங்கள் இடங்கொடுத்து எங்களைக் காப்பாற்றியதே பெருங் கைம்மாறு: மேலும், சுதந்தரம் பெறும்பொருட்டு உழைப்பவர்களுக்கும் அநீதியை எதிர்த்து அடக்க முயல்பவர்களுக்கும் உதவி செய்வதற்காகவே யாம் இப்புவியின்மீது தோன்றியுள்ளோம்: உங்கள் நாட்டையும் எம்முடைய தாயகம்போல் பாவித்துச் செய்யவேண்டியவைகளைச் செய்துளோம்: நியமம், அல்லது கடமையின் கட்டளையை அநுசரித்து உழைத்தோமேயல்லாது புகழையும் பொருட்செல்வத்தையும் அவலம்பித்து உங்கள் பக்கமடைந்து யுத்தஞ் செய்யவில்லை; ஆதலின், உங்களிடமிருந்து எத்தகைய பரிசை

யும் யாம் வேண்டிப்பெறுேம்.'' என ஓர் கடிதத்தின் வாயிலாகக் கூறி மறுத்ததையும் விரிக்காதுவிடுப்போம்.

சேனைகளைச் சடுதியில் எழுப்பிச் சேகரித்து முறைப்படி நடத்துவதற்கான சாமர்த்தியமும், எத்தகைய அபாயங்களினின்றும் தப்பிப் பிழைப்பதற்கான சூழ்ச்சிகளும், ஆபத்து நிறைந்த சமயங்களில் செய்யவேண்டியவைகளை ஊகித்தறிந்து செய்வதற்கான நுட்பபுத்தியும், தன் பட்டாளர்களின் தொகை எவ்வளவு சிறியதாகுலும் அதைத் தந்திரமாகச் செலுத்தி ஜயமடைவதற்கான வல்லமையும், ஒரு வார்த்தை அல்லது பார்வையினுல் நூற்றுக்கணக்கானவர்களைத் தன் பக்கத்தில் சேர்த்து உழைக்கச் செய்வதற்கான கம்பீரமும் இவர் மேற்கூறிய இடத்தில் இருந்து வருகையிற்றுன், இவரிடம் வளர்ந்து பெருகின. உல்லாசகுணமும், வாய்மையும், நேர்மையும், பொறுமையும் பொருந்தியவராதலால், இவர் பிறரால் நன்கு மதிக்கப்பட்டு வந்தார். பொருட்செல்வத்தையும் கியாதியையும் முன்கருதி உழைத்தவரல்ல. இவ்வுலக வாழ்க்கைக்கு அத்தியாவசியமானவைகளையே மேற்கொண்டவர். வீண் ஆடம்பரங்களை வெறுத்தவர். இச்சமயத்திற்றுன், இனிமையும் தைரியமும் மிகுந்தவளும் சாரத்தியத்தில் தேர்ந்தவளுமான அனிடா ரிவீரா டி ஸில்வா (Anita Riveira de Silva) என்றவளை மணந்தார்.

இஃதிவ்வாறுக, 1846-ம் ஆண்டில், பதினுருவது கிரெகரி (Gregory XVI) என்ற பிரதான பாதிரி மரித்தவுடன், ஒன்பதாவது பையஸ் (Pius IX) என்ற பட்டப் பெயருடன் வேறெருவன் போப்பாளுன். ஜனங்கள் மகிழ்வுறும்படிக்கும் இத்தாலியாவின் சிற்றரசர்களும் வேறு மன்னவர்களும் திகிலடையும்படிக்குமான சீர்திருத்தங்களினுல் இத்தாலியாவை முன்னுக்குக் கொண்டுவருமாறு அப்போப் ஏற்பாடு

செய்துவருவதை அறிந்த நமது கரிபால்டி அவனுக்குப் பின்வருமாறு ஓர் கடிதம் எழுதி யனுப்பினார்: "உம்மைப்போலவே யாமும் சுதேசத்தின் நன்மைக்காக உழைத்தோம். இதினிமித்தம் யாம் இத்தாலியாவினின்று துரத்தப்பட்டபோதிலும், கூடிய சீக்கிரத்தில் இத்தாலியாவுக்கு நற்காலம் உதிக்கப் போகிறதென்ற விசுவாசத்தைக் கைவிடாது, அவ்விசுவாசம் நிறை பெறுவதற்கான நற்சமயத்தை யாம் எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறோம். ஆகலால், உங்களுக்கு வேண்டிய உதவியை யாம் எம்மாலியன்றவரையிலும் செய்யத் தயாராயிருக்கின்றோம். எம், உடல், பொருள், ஆவி மூன்றையும் சுதேசத்தின் பெருமைக்காகவே தியாகஞ் செய்துவிட்டோம்." இதற்கு அப்பிரதானி, அதைரியசாலியானதால், யாதொரு மறுமொழியும் அனுப்பவில்லை. பின், அவன் இதர அரசர் கைக்குள்ளகப்பட்டு தான் இதுகாறும் செய்தவைகளுக்கு நேர் எதிரான நீசகாரியங்களைச் செய்யத் தலைப்பட்டனன். இதைக் கரிபால்டி அறிந்திருந்தபோதிலும், சுதேசத்திற்குத் திரும்பிச் சென்றால், எவ்விதத்திலாயினும் இத்தாலியர்களைத் தன் ப்க்கத்தில் சேர்த்துச் சுதந்தரக் கொடியை நாட்டப் பிரயத்தனிக்கலாமென எண்ணித் தன் அறுபது, அல்லது எழுபது சிநேகிதர்களுடன் இத்தாலியாவுக்குப் பிரயாணப் பட்டார்.

இடையில், இத்தாலியா தேசமுழுவதிலும், கலகமும் போரும் கொலையும் பெருகிப் பரவின. முன்கூறிய சார்லெஸ் ஆல்பர்ட் என்பவன் ஆஸ்திரியர்களைப் பலதடவை எதிர்த்துப் போர்செய்தான். கடைசியில் இவன் தோற்றுத் தளர்வுற்றதனாலும், ஜனங்களுக்கு இவன்பேரில் அவநம்பிக்கை உண்டானதாலும், தன் நாடுகளை இவன் தன்னுடைய மைந்தனிடம் ஒப்புவித்து வேறிடத்திற்குச் சென்று இறந்தான். ஆஸ்திரி

யர்களின் வெற்றியையும், அகோரங்களையும், தம்முடைய தோல்வியையும், சுதேசாதிபதிகளின் பிணக்கத்தையும் துரோகத்தையும் கவனித்துவந்த இத்தாலியர்கள் ஐயம், அதைரியம், துக்கங்களினால் பீடிக்கப்பட்டு வருந்தினார்கள், எனினும், இறுதிப்பலன் யாதாயினும் அதைப் பொருட்படுத்தாது, தக்க சமயங்களிலெல்லாம் கலகங்களெழுப்பிவந்தார்கள்.

பின், பிரதான பாதிரிக்கும் பிரஜைகளுக்கும் சண்டை உண்டானபொழுது, ஆஸ்திரியர்களும் ப்ரென்சுக் காரர்களும் முன்வந்து அவருக்கு உதவியதையும்; இச்சமயங்களில் நமது கரிபால்டி தெரிவித்த வீரதீரங்களையும்; பின், உபாயத்தினால் கரிபால்டியும் இவர் வகுப்பினரும் வெல்லப்பட்டுத் துரத்தப் பட்டதையும் விரிக்காது விடுப்போம்.

"ஓ, இத்தாலிய யுத்தவீரர்களே! பசியும், தாகமும், படுக்க வெறுந்தரையும், உங்கள் களைப்பைத் தணிக்கச் சூரியனின் வெப்பமும் தவிரவேறெவ்வித நன்மையும், என்னைநீங்கள் பின்பற்றுவீர்களாயின், உங்களுக்கு உண்டாகாது: சம்பளமும் நல்லன்னபானாதிகளும் உங்களுக்குக் கிடைக்கா: கூடாரங்களும் உடுப்புகளும் கூட உங்களுக்கு என்னால் அளிக்கமுடியாது: சதாகாலமும் இடம் விட்டு இடம் பெயர்ந்துகொண்டே யிருக்க வேண்டும்: ஈட்டி, வாள் முதலான ஆயுதங்களைச் சதாகாலமும் உபயோகித்துவர வேண்டும்: உங்களுக்குப் பின் உண்டாகும் கீர்த்தியை உணர்ந்தறிந்து, உங்கள் தேசத்தினரின் சுதந்தரத்தையும் சுகத்தையும் முன்னிட்டு உழைக்க என்னைப் பின்பற்றிவர விரும்புவீர்களாயின், மேற்சொல்லிய விடத்துக் களைப் பொறுக்கவேண்டும்: இவ்விதஞ் செய்ய உடன்படுபவர்கள் என்பக்கஞ் சேரலாம்: மனமில்லாதவர்கள் யாதொரு ஆக்ஷேபமுமின்றிச் செல்லலாம்" என நமது கரிபால்டி விள

ம்பரஞ் செய்தவுடன், ஐயாயிரம் சிப்பாய்கள் இவரைச் சேர்ந்து சண்டைசெய்து வந்தார்கள்.

பின் யாதொன்றும் செய்யமுடியாமையாலும், இவருடைய மனைவி காலகதியடைந்து விட்டதனாலும், மீண்டும் இத்தாலியாவை விட்டு வட அமெரிக்காவிலுள்ள நியூ'.யார்க் என்ற நகரத்திற்குவந்து, சிலமாதம் வரையிலும், அவ்விடத்தில், மெழுகுவர்த்திசெய்து விற்றுத் தன் வாணாளைச் செலுத்திவந்தார். பின், 1854-ம் வருடத்தில், இத்தாலியாவுக்குத் திரும்பிவந்து, காப்ரெரா என்ற தீவில் தங்கி, உதாரமித்தம் நிலங்களை உழுது பயிரிட்டுவந்தார்.

1859-ம் ஆண்டு முதற்கொண்டு இத்தாலியாவின் சுதந்தரத்தின் பொருட்டுப் பல சண்டைகள் உண்டாயின. சார்லெஸ் ஆல்பர்டின் மைந்தனான விக்டர் இமானிவேல் (Victor Emanuel) என்ற அரசனின் மந்திரியான கவூர் பிரபுவினால் (Count Camillo Benso Di Cavour, 1810-1861) நமது கரிபால்டி சேனாதிபதியாக நியமிக்கப்பட்டதையும்; விக்டர் இமானுவேல் ரோமாபுரியை எதிர்த்துச் சென்றதையும்; இதனால் ப்ரென்சு ராஜாங்கத்திற்கும் விக்டோர் இமானிவேலுக்கும் உண்டான பிணக்கத்தையும்; போப்பும், ஆஸ்திரியர்களும் பற்பலவிடங்களில் தோல்வியடைந்ததையும்; நமது கரிபால்டி லண்டன்மாநகருக்குச் சென்று ஆங்கிலேயரையும் ஆங்கிலத் துரைத்தனத்தையும் இத்தாலியர்கள் பக்கஞ் சேர்ப்பித்ததையும்; இத்தருணத்தில், கரிபால்டிக்குத் தக்க உதவிசெய்யும் பொருட்டுப் பெருஞ் சேனையை ஆங்கிலேயர்கள் அனுப்பியதையும்; விக்டர் இமானிவேல், கவூர் பிரபு, கரிபால்டி முதலாயினோர் ப்ரென்சுக்காரர்களையும் ஆஸ்திரியர்களையும் இத்தாலியாவினின்று துரத்தி, ரோமாபுரியைத் தலைநகராக்கி, இத்தாலியாவை ஓர் ஒப்புயர்வில்லாத சுயரா

சாட்சி நாடாக விளங்கச் செய்யவேண்டுமெனத் தீர்மானித்து மிக்க சிரத்தையுடன் உழைத்ததையும்; விக்டர் இமானுவேல் இத்தாலியாவின் மன்னவனாகத் தேர்ந்தெடுக்கப்பட்டதையும்; 1861-ம் வருடத்தில், ட்யூரின் என்ட இடத்தில் கூடிய முதற் பொதுஜன சபையில், இவரும் ஓர் அங்கத்தினராக நியமிக்கப்பட்டதையும்; மேற்சொல்லிய கவூர்பிரபு மரித்த பின் நியமிக்கப்பட்ட அமைச்சர்களுக்கும் நமது கரிபால்டிக்கும் உண்டான மனோ வித்தியாசங்களையும்; பின் சம்பவித்த போர்களொன்றில், இவர் இத்தாலியர்களாலேயே தவறுதலாகச் சுடப்பட்டதையும்; பின், பாரிஸ், லண்டன் மாநகர்களுக்குச் சென்று வசித்ததையும்; இவ்விடங்களில் இவர் இருந்துவருகையில், அனைவராலும் மிக்க அன்புடன் பராமரிக்கப்பட்டு வந்ததையும்; 1866-ம் ஆண்டில், ஆஸ்திரியவரசாட்சி வேருடன் விழுத்தப்பட்டதையும்; 1870-ம் வருடத்தில் ப்ரஷியர்களுக்கும் ப்ரென்சுக்காரர்களுக்கும் போர் உண்டாகவே, ப்ரென்சுக்காரர்களும் இத்தாலியாவினின்று அகன்றதையும்; பிரதான பாதிரி அடக்கப்பட்டு ரோமாபுரி இத்தாலியாவின் ராஜதானியாக்கப் பட்டதையும் விரிவஞ்சி எழுதாது விடுத்தனம்.

1882-ம் வருடம் ஜூன்மாதம் 2-ந்தேதியில், இவர் விண்ணுலகமடைந்தனர்.

குணாதிசயங்கள்:—மனவுறுதி, விடாமுயற்சி, மிக்கமேலான லக்ஷியங்களின்மீது நம்பிக்கை, பரோபகார சிந்தனை, சமயோசிதநடை, எச்சந்தர்ப்பத்திலும் ஆய்ந்தோய்ந்து பார்த்து நன்மையையே பற்றிச் செய்வதற்கான சக்தி, பொறுமை முதலானவைகள் வாயப் பெற்ற சுசீலன். வறுமையிலும், செல்வத்திலும் தற்சுகத்தைக் கருதாது,பிறர் படுங்கஷ்டநஷ்டங்களைப் பார்த்துணர்ந்தறிந்து உதவி அத்துர்ப்பாக்கியர்களைக் குளிர்ப்பித்த தயாளன். போர்க்களத்தில், மிக்க வீரத்துடனும் கடுமையுடனும் யுத்தஞ் செய்தபோதிலும், பின். எதிரிகளானாலுஞ்சரி, நண்பர்களானாலுஞ்சரி, தன் கீழுள்ள

சிப்பாய்களானாலுஞ்சரி, யாவரிடத்தும் எவ்வித வித்தியாசமு மின்றிப் பக்ஷத்துடன் பழகிய உத்தமன். தன் கைத்தொழிற் களினாலேயே தன் ஜீவகாலத்தை நடாத்திய பெருமகன். சுதேசாபிமானமும் சுதந்தரப் பிரியமும் மாத்திரம் உடைத் தாய், ஒற்றுமை என்பது சிறிதேனுமில்லாததால், கொடுங் கோலாட்சிக்குட்பட்டுத் தயங்கிமடியாகின்ற இத்தாலியர்களைச் சேர்த்து, சுதேச வளர்ச்சிக்காக உழைக்கச்செய்து, சரியான ஆயுதங்களும், உடுப்பும் அன்னபானாதிகளும் இல்லாது வாடி வதங்கிய பேதைகளைத் தைரியப்படுத்திப் போர்புரிந்து ஜயிக் கச் செய்த வீரன். சத்துருக்களின் தொகையையும், தண்டனை களையும், சுதேசத்தினரின் பராமுகத்தையும் கவனிக்காது, அல்லது பொறுத்துத் தன் அந்தக்கரண ஆக்ஞையையே ஓட்டி நடந்த தீரன். சுதேச நன்மைக்காகவும், சுதந்தர ஸ்தா பனத்திற்காகவும் பாடுபட்டவர்கள், அவர்கள் எத்தேசத்தி னராயினுஞ்சரி, தனக்குத் தீங்கு இழைத்திருந்தாலுஞ்சரி, அல்லது இழைத்தாலுஞ்சரி, அவைகளை நினைத்து மௌனமு ற்றிருக்காது, பக்கமடைந்து, அவர்கள் கைப்பற்றிச் செய்ய வேண்டியவைகளை அவர்களுக்குத் தெரிவித்து, தானும் அவ ர்களிடையில்தங்கி, அவர்களுடைய மனோபீஷ்டங்களைப் பூர்த் திசெய்துவந்த உத்தமன். இத்தாலியர்களை ஒருங்கு சேர்த்து, இத்தாலியாவை ஓர் இணையில்லாத ராஜ்பமாக மாற்ற வேண்டு மென்ற தாந்தேயின் உள்ளக் கருத்தைக் கைகூடிவரச் செய்த பெரியோன். மலைபோன்ற இன்னல்களையும், காட்டாறுகளைப் போன்ற ராஜ்யாதிபதிகளின் சிக்ஷைகளையும் தன் காலின் கீழ டக்கி, விசுவாசமென்ற நக்ஷத்திரத்தினால் முன்னிழுக்க ப்பட்டு, ஆத்மார்ப்பணம், நேர்மை, தூய்மை, க்ஷமை என்பன வாதிகளால் மேலெழுப்பப்பட்டு, அடிமையாகிய கெட்டிச் சங்கிலியினால் கட்டப்பட்டு மூர்ச்சித்துக் கிடந்த இத்தாலியர் களை உயிர்ப்பித்த மகான்.

செவ்வாய் தோஷம்.

Kuja Dosha.

ஸ்ரீமான் S. K. பார்த்தசாரதி B.A., B.L., எழுதியது.

செவ்வாய் தோஷம் என்பது செவ்வாய் என்னும் கிரகம் ஒரு ஜாதகத்தில் கெடுதலாய் இருந்தாவது கெட்ட ஸ்தானங்களில் இருந்தாவது தீங்கு விளைவிப்பது. செவ்வாய் என்பது தீத்தன்மையது. மணம் தீயின் முன்பு அதே சாட்சியாய் நடப்பதால் செவ்வாய் தோஷமிருப்பின் மணநிலை கெடும் என்பது கொள்கை. ஆயினும் இத்தோஷம் நமது சோதிட சாத்திர புத்தகங்களில் பேர்பெற்றவையுள் எவற்றிலும் காணப்படவில்லை. ஆராய்ச்சி செய்துள்ள சிலர் இது கேரளசாத்திரத்தில் மாத்திரம் உளது என்றும் அதனின்று தமிழ்த் தேசங்கட்கும் பரவியுள்ளது என்றும் கூறியுளார். இப்பொழுதோ இத்தோஷத்தையே முக்கியமாகக் கருதி மணம் செய்யவோ தவிர்க்கவோ ஆயிற்று. இச்செவ்வாய் தோஷம் என்பது "செவ்வாய் ஜாதகத்தில் 2, 4, 7, 8, 12 இந்த ஸ்தானங்களில் இருந்தால் ஸ்திரீகளுக்கு புருஷர் நாசமும் புருஷர்க்கு ஸ்திரீ நாசமும் விளையும்" என்று சொல்லியிருக்கிறது. இந்த 2, 4, 7, 8, 12 ஸ்தானங்கள் லக்னம், சந்திரன், சுக்ரன் என்ற மூன்றினின்றும் எண்ணவேண்டுமென்று சொல்லியுளார். ஆயினும் புருஷர்களுக்கு மாத்திரம் சந்திரனும் சுக்ரனும் இல்லற வாழ்க்கைக்கு சம்பந்தப்பட்டுள்ளதே தவிர ஸ்திரீகளுக்கு சூரியனும் செவ்வாயும்தான். செவ்வாய் செவ்வாயினின்று 2, 4, 7, 8, 12ல் உளதென்பது முடியாது. மேலும் 2, 4, 7, 8, 12 என்பன பாவம் அல்லது வீடுகள். சோதிடத்தில் இவை லக்னத்தினின்றே எப்பொழுதும் எண்ணப்படுகின்றன. மேலும் லக்னத்தினின்றுள்ள ஒவ்வோர் வீடும்

ஒவ்வொன்றைக் குறிப்பதாகக் கருதி அவ்வவ் விடங்களில் இருந்தால் அவ்வவ் விஷயமாக கேடுறும் என்பது கொள்கை. உதாரணமாக, 2-ம் வீடு குடும்பம், 4-வது ஸுகம், 7 புருஷன் அல்லது மனைவி, 8-வது ஆயுள் (புருஷன், மனைவிகளின் ஆயுள்), 12-வது சயனஸுகம். இந்த ஸ்தானங்களில் செவ்வாய் இருந்தால் இல்லற வாழ்க்கை கெடுதலால் இவற்றை எடுத்திருக்கிறார்கள். இவற்றுள் 7, 8 ஸ்தானங்களே முக்யமானவை.

இந்த விதிக்கு சில விலக்குகள் உள. அவை யாவன:— "குடும்பம் வாக்கு முதலியவற்றிற்கு காரகனான புதனது வீடுகளான மிதுன கன்னிகளில் இருப்பின் 2-வது வீட்டில் இருக்கும் தோஷம் கிடையாது; தனது வீடுகளான மேடவிருச்சிகங்களில் இருப்பின் ஸுக ஸ்தானமாகிய 4-வது வீட்டிலிருக்கும் தோஷம் கிடையாது; தான் நீசனயாவது உச்சனயாவது இருக்கும் கடக மகரங்களில் இருப்பின் புருடன் மனைவிகளைக் குறிக்கும் 7-வது வீட்டிலிருக்கும் தோஷம் கிடையாது. எல்லா மங்களங்களுக்கும் காரணமாய் எத்தீங்கையும் ஒழித்து நன்மையே விளைவிக்கவல்ல குருவின் வீடுகளாகிய தனுஸ், மீனம் இவைகளில் இருப்பின் தோஷம் கிடையாது. சயன ஸுகத்திற்கு அதிபதியாகிய சுக்ரனுடைய வீடுகளாகிய இடப துலாரங்களில் இருப்பின் 12-வது வீட்டில் இருக்கும் தோஷம் கிடையாது; எல்லா தோஷங்களையும் எரிக்க வல்லவனும் எல்லாக் கிரகங்களுக்கும் அதிபதியான சூரியனுடைய வீடாகிய ஸிம்மத்திலிருப்பினும், குடம் எனப்படும் கும்பமுதிலிருப்பின் குடத்திலிட்ட தீபம்போல் ஒளியற்று சக்தியிழந்திருப்பதால் கும்பத்திலிருப்பினும், ஸ்திரீ புருஷர்களுக்கு ருதுகர்ப்பம் முதலியவற்றிற்குக் காரணமான சந்திரனுடன் சேர்ந்திருப்பினும், அவனால் பார்க்கப்பட்டாலும் எல்லா நன்மைகளுக்கும் காரணமான குருவுடன் கலந்திருப்பினும் அவனால் பார்க்கப்படினும், இத் தோஷம் கிடையாது."

இவ்விலக்குகளை நம்மவர்கள் கவனிப்பதில்லை. எங்களுக்குத்தெரிந்த ஒரு பெண்ணுக்கு மணம் நிச்சயித்தபிறகு மணப்பிள்ளையின் பெற்றோர் பெண்ணின் ஜாதகத்தில் செவ்வாய் தோஷம் உளதால் மணம் புரியமாட்டோம் என்று கூறிவிட, அப்பெண்ணின் தகப்பனர் எம்மிடம் அக்கடிதத்தையும் அப்பெண்ணின் ஜாதகத்தையும் கொடுக்க, அதில் செவ்வாய் கும்பத்தில் குருவால் பார்க்கப்பட்டிருக்க, தோஷம் கிடையாது என்று எடுத்துக் கூறியதால் மணம் நிறை வேறிற்று. அப்பெண்ணும் இப்பொழுது இரண்டு குழந்தைகள் ஈன்று சுகமாக வாழ்கின்றனன்.

மேலும் இச் செவ்வாய் தோஷம் என்பது இன்றியே பல புருடர்களுக்கும் ஸ்திரீ நாசமும் ஸ்திரீகளுக்கு வைதவ்யமும் உண்டாவதை நாங்கள் கவனித்திருக்கிறோம். புருடர் ஜாதகத்தில் மனைவி யிழத்தலைக் காட்டுவதற்கும் பெண்கள் ஜாதகத்தில் புருடனை இழப்பதற் குரியனவும் ஆகிய பல கிரக நிலைகள் சோதிட சாத்திரத்தில் எண்ணிலவாய் கூறப்பட்டுள. அவற்றை இவ்விடத்தில் கூற இயலாது. அவையே முக்யமானவை; அவற்றைக் கருதவேண்டுமே ஒழிய இச் செவ்வாய் தோஷத்தைக் கவனித்தல் தகுதியன்று. உதாரணமாக ஆண் ஜாதகத்தில் சந்திரனும் சுக்ரனும் நல்ல இடங்களில் சுபர்களால் பார்க்கப்பட்டு இருப்பின் செவ்வாய் 2,4,7,8,12 களில் இருப்பதால் தீங்கு விளையாது. அவ்வித பெண் ஜாதகத்தில் சூரியன் நல்ல இடங்களில் வலுவடைந்து சுபர்களால் பார்க்கப்பட்டிருப்பினும், செவ்வாய் சுபர்களுடன் சேர்ந்தாயினும் அவர்களால் பார்க்கப்பட்டிருப்பினும் கணவனை யிழக்க நேரிடாது.

ஆகவே இந்த செவ்வாய் தோஷம் என்பதை முக்யமாகக் கருதாது ஆண் பெண் ஜாதகங்களைத் தனித்தனியாகவும் ஒன்றுடன் மற்றொன்றைச் சேர்த்தும் பார்த்து மணம் செய்யவேண்டும். இது எவ்விதம் செய்வதென்பதை சுருக்கமாக இன்னொரு பகுதியில் எழுதுவோம்.

குறிப்புகள்
Notes.

கிழமை.
DAYS OF THE WEEK.

பெப்பிரவரி, மார்ச், நவம்பர் மூன்றும் ஒரே கிழமையில் தொடங்குகின்றன. ஜனவரியும், அக்டோபரும்; ஏப்பிரலும், ஜூலையும்; செப்டம்பரும், டிசம்பரும் அவ்வாறே.

ஒவ்வொரு வருஷமும் எந்தக் கிழமையில் தொடங்குகின்றதோ அதே கிழமையில் முடிகிறது.

இவை எல்லாம் 365 நாள் கொண்ட சாதாரண வருஷத்தைப் பற்றிய விஷயங்களேயன்றி லீப் வருஷத்தைப் பற்றியவையல்ல.

புதன், வெள்ளி, சனிக்கிழமைகளில் எந்த நூற்றாண்டாவது தொடங்காது.

'டிட் பிட்ஸ்' அ.

வரவேற்பு
Acknowledgment.

கதாரத்நாகரம், கலாசிந்தாமணி, கதாவருஷணி, நாடார் குலமித்திரன், வன்னிகுலமித்திரன், ஸௌராஷ்டிரன், பாதுகாவன், விவேகபாநு, விவேகபோதினி, இந்துசாதனம், லோகோபகாரி, கற்பகம், சர்வஜனமித்திரன், தமிழபிமானி என்னும் பத்திரிகைகளும்; நாச்சியார் கோவில் முஸ்லீம் சங்கத்தாரின் பிரசுரங்களும், சென்னை அறிவிப்புச் சங்கத்தாரின் பிரசுரங்களும் எமக்குக் கிடைத்துவருகின்றன. அவற்றை மிகவும் வந்தனத்துடன் வரவேற்கிறோம்.

கௌரவத் துணைக் காரியதரிசி,
தமிழர் கல்விச் சங்கம்.